**MCOP NO: 2073/2024** **DATE: 19.06.2026**

ம.சா : 1

பெயர் : திரு.ஹரிகிருஷ்ணன்

த/பெ : திரு. சுப்பையா

வயது : 54

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 19.06.2026ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 11 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்து போனவர் என் மகன். என் மகன் விபத்து சமயத்தில் அவர் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தார். ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அது என் வசம் உள்ளது. என் மகன் இருசக்கர வாகனத்தை விபத்திற்கு முன்பு எத்தனை வருடங்கள் ஓட்டிக்கொண்டிருந்தார் என்றால் சுமார் 3 வருடங்களாக ஓட்டிக்கொண்டிருந்தார். குமரேசன் என் மகனின் நண்பராவார். குமரேசனின் ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகன் தச்சராக வேலை பார்த்து வந்தார். என் மகனின் தொழில் மற்றும் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமான 1ம் எதிர்மனுதாரரின் வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து தேதியில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற குமரேசன் என்பவருக்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்ததால், அவர் அந்த வாகனத்தை ஓட்டும் போது முறையான ஓட்டுநர் உரிமம் பெற்ற நபரை அமரவைத்துக்கொண்டு தான் வாகனத்தை ஓட்ட வேண்டும் என்றும், இந்த வழக்கில் அவ்வாறு செய்யவில்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் 2ம் மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் ஏதேனும் இழப்பீடு பெற வேண்டும் என்றால் அதை 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து தான்

பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.